**Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research**
**Puducherry**

सत्यमेव जयते

## Cancer Care at JIPMER during lockdown period for Covid 19 pandemic

JIPMER, Puducherry had established a dedicated isolation ward for Covid 19 as early as 27th January 2020. The Institute also took the necessary steps to get approval for RT-PCR testing for the novel corona virus in early February 2020. Soon thereafter, in March 2020, it decided to establish an exclusive 250-bedded hospital with 36 beds with ventilators and monitors and 142 beds with piped oxygen supply. This facility is equipped to handle high-risk patients with multiple organ dysfunction. It is manned by specialist doctors and nurses from various sub-specialities who are posted by rotation.

The lockdown in late March 2020 led to a significant disruption in elective patient care services. This was related to the need to avoid crowding and maintain social distancing norms, travel restrictions, and diversion of specialist staff to Covid care, etc. However, despite this, the Institute continued to provide all the emergency services in all the disciplines all through, including during the strict lock-down periods. These essential non-Covid services that have been continuously run include high-risk deliveries, neonatal services, maintenance hemodialysis, diagnostic services, blood and blood component transfusion, emergency surgeries, etc. With the easing of lock-down, in mid-April 2020, the Institute took steps to regulate outpatient crowd with preliminary screening and telephone-based consultation. By end-April 2020, the out-patient service was extended to appointment-based hospital visits, an arrangement that is continuing till date.

In spite of overwhelming challenges, the Institute has performed 376 major surgeries from the onset of lockdown till 30th of June 2020. Most of these have been operations for emergency conditions, life-saving operations such as for patients with cancer, those directed at saving a vital organ or a limb, and complicated brain and heart operations. In addition, a total of 3861 chemotherapy cycles have been administered for to previously-registered cancer patients. Furthermore, 410 newly-diagnosed patients with various cancers were registered and started on chemotherapy during the above period. In addition, three patients each have received autologous and allogeneic bone marrow transplantation during the same period, and over 800 cancer patients have received blood transfusions in the Department of Medical Oncology. Also, the Department of Radiation Oncology has delivered 3351 radiotherapy sessions, 85 brachytherapy sessions, and 2574 chemotherapy sessions.

JIPMER has also admitted 1644 patients suspected for Covid-19 since the onset of the first lockdown. A large majority of these admissions have been for patients from Puducherry, but also include many patients from adjacent districts in Tamil Nadu. In addition, during this period, JIPMER has tested 15333 specimens from patients, including those from Puducherry, Tamil Nadu and Madhya Pradesh, for Covid-19 using RT-PCR.

As on 4th July 2020, a total of 142 confirmed and 12 suspected patients with novel corona virus infection are admitted in the Covid block at the Institute. The Institute has continuously striven to provide tertiary health care facilities in all the non-Covid specialties as well as for the Covid-19 pandemic and is available to the most vulnerable population groups in the region, despite several significant constraints.

Director
JIPMER
4.7.2020

## ஜிப்மர் மருத்துவமனையில் கோவிட் தொற்று காலத்தில் புற்று நோய் சிகிச்சை

ஜிப்மர் மருத்துவமனையில் கோவிட்-19 தொற்று நோய்க்காக ஒரு தனிமைப்பிரிவு ஜனவரி 27ஆம் தேதி அன்று உருவாக்கப்பட்டது. இந்த நோய்க்கான ஆர்-டி பிசிஆர் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் பிப்ரவரி மாத ஆரம்பத்தில் செய்யப்பட்டு, மத்திய அரசின் அனுமதி கிடைக்கப்பட்டது. மார்ச் 2020 ஆரமபத்தில் ஒரு பிரத்யேக 250 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை வளாகம் கோவிட் தொற்றுக்காக ஏற்படுத்தப்பட்டது. இந்த வளாகத்தில் 36 செயற்கை சுவாசக் கருவிகளுடன் கூடிய படுக்கைகளும், மேலும் 142 பிராண வாயு வசதிகளுடன் கூடிய படுக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டது. இந்த வளாகம் கோவிட் தொற்றால் ஏற்படக் கூடிய பல-உறுப்பு செயலிழப்பால் ஏற்படக் கூடிய தீவிர சிகிச்சைக்காக ஏற்படுத்தப்பட்டது. ஜிப்மர் மருத்துவமனையில் அனைத்து பிரிவிலும் இருந்து பல்வேறு மருத்துவ நிபுணர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த வளாகத்தில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டனர்.

அரசு உத்தரவின் படி மார்ச் மாத கடைசியில் நடைமுறைக்கு வந்த பொது முடக்கத்தினால் அனைத்து விதத்திலும் பொதுவான மருத்துவ சேவைகளை அளிப்பதில் கடுமையான சிக்கல்கள் உருவாயின. இவை மக்கள் கூட்டம் கூடுவதை தவிர்க்கவும், பொது போக்குவரத்து முடக்கத்தினாலும், மற்றும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பணியாளர்களின் மாற்று பணியிடங்களினாலும் தவிர்க்க முடியாதவையாக இருந்தது.

இந்த சிரமங்களையும் தாண்டி ஜிப்மர் அனைத்து வித அவசர உயிர் காக்கும் சிகிச்சைகளையும் பொது முடக்க காலத்திலும் அளித்து வந்துள்ளது. இதில் கோவிட் அல்லாத உயர் தீவிர சிகிச்சை தேவை படக்கூடிய மகப்பேறு, பச்சிளம் குழந்தை வைத்தியம், இரத்த சுத்திகரிப்பு, உயர் சிகிச்சைக்கான பரிசோதனைகள், இரத்த வங்கி மற்றும் இரத்தக் கூறு சேவைகள், அவசர அறுவை சிகிச்சைகளும் அடக்கம்.

பொது முடக்கத் தளர்வு ஏப்ரல் மாதத்தில் அறிவித்தவுடன் கட்டுப்படுத்தப்பட்ட வெளிப்புற சேவைகளை மருத்துவமனை நிர்வாகம் தொலை மருத்துவ சேவைகள் மூலம் துவங்கியது. ஏப்ரல் இறுதியில் வெளிப்புற சேவைகள் முன் பதிவு முறை மூலமாக வழங்கப் பட்டு வருகிறது.

பல்வேறு சோதனையான காலகட்டத்திலும், ஜிப்மரில் இந்த பொது முடக்க காலத்தில், 30 ஜூன் மாதம் வரை 376 முக்கியமான அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன. இதில் பெரும்பாலும் அவசர சிகிச்சை, புற்று நோய் போன்ற உயிர் அல்லது உறுப்பு காக்கும் அறுவை சிகிச்சைகள், நுணுக்கமான இருதய மற்றும் மூளைக்கான அறுவை சிகிச்சைகளும் அடங்கும்.

மேலும் ஏற்கனவே பதிவு செய்து நோய் கண்டுபிடிக்கப்பட்ட புற்று நோயாளிகளுக்கு 3861 கீமோதெரபி வைத்தியம் அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர 410 புதிதாக புற்று நோய் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் இந்த சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலா மூன்று நோயாளிகளுக்கு ஆட்டோலகஸ் மற்றும் அல்லோஜீனஸ் எனப்படும் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது. இதே பொது முடக்க காலத்தில் மருத்துவ புற்று நோயியல் துறையில் 800 புற்று நோயாளிகளுக்கு இரத்தக் கூறு சேவைகள் அளிக்க பட்டுள்ளது. கதிர்வீச்சு புற்று நோயியல் துறையில் 3351 கதிர் வீச்சு வைத்தியர்களும், 85 பிராக்கி தெரப்பீ எனப்படும் கதிர் வீச்சும், 2574 கீமோதெரபி வைத்தியமும் அளிக்கப்பட்டுள்ளது.

ஜிப்மரில் 1644 கோவிட் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட நோயாளிகள் பொது முடக்க காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோனோர் புதுச்சேரி மற்றும் அருகில் உள்ள தமிழக மாவட்டங்களை சேர்ந்தவர்கள். இதே கால கட்டத்தில் ஜிப்மரில் 15333 நோயாளிகளின் மாதிரிகள் ஆர்-டி பிசிஆர் மூலம் பரிசோதனை செய்ய பட்டுள்ளது. இந்த பரிசோதனை சேவைகள் புதுச்சேரி, தமிழ் நாடு மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் உள்ள நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 4ஆம் தேதி அன்று 142 உறுதி செய்யப்பட்ட மற்றும் 12 கொரோனா தொற்று சந்தேகிக்கப்பட்ட நபர்கள் ஜிப்மரில் கோவிட் வளாகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த இக்கட்டான கொரோனா பெருந் தொற்று காலம் மற்றும் பொது முடக்க சூழ்நிலையிலும் தொற்று நோய் மட்டுமல்லாமல் அனைத்து சிறப்பு மருத்துவ பிரிவுகளிலும் ஜிப்மர் மருத்துவமனை ஏழை எளியவர்கள் மற்றும் பொது மக்களுக்கும், உயர் தீவிர சிகிச்சை அளித்து வருகிறது.

இயக்குனர்
ஜிப்மர்
4.7.2020